22nd November 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் இதை மேற்கொள்வதற்கான உத்தேசம் இப்போதில்லை என்று சொன்னேன். அங்குள்ள மக்கள் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று முன்வந்தால், அதற்கு அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி பரிசிலிக்கும்.

அரசாங்க நூல் நிலையங்கள்

* 476 **கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழகத்தில் உள்ள அரசாங்க நூல் நிலையங்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) எதிர்கட்சி நடத்தும் பத்திரிகைகள், அரசாங்க நூல் நிலையங்களில் இடம் பெறக்கூடாது என்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா ?

(உ) அரசாங்கம் நடத்தும் பல நூல் நிலையங்களில் எதிர்க்கட்சியினர் நடத்தும் பத்திரிகைகள் காணப்படாததன் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Total number of Branch Libraries (including the District and Firka Central Libraries) in the State as on 1st July 1963 is 658.

(இ) No, Sir.

(உ) The discretion in the matter of purchase of dailies and periodicals for the libraries maintained by them is with the Local Library Authorities under the Madras Public Library Act, 1948 and Government have no information on this point.

திரு. செ. கோ. விசுவநாதன் : சாதாரணமாக செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள நூல் நிலையங்களில் எல்லாம் எதிர்க்கட்சியைச் சார்ந்த பத்திரிகைகள் இல்லை என்பதை சர்க்கார் உணருமா ? அப்படியென்றால் எதிர்க்கட்சியைச் சார்ந்த பத்திரிகைகளையும் வரவழைப்பதற்காக அரசாங்கம் சிபாரிசு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரியாது. மேலும் சிபாரிசு செய்வது என்பதும் முறையல்ல.

திரு. வி. எஸ். எஸ். மணி : லோக்கல் லைப்ரரி அத்தாரிட்டி நூல் நிலையங்களில் பெரும்பான்மையான மக்கள் வாசிக்கக்கூடிய செய்தித் தாள்கள் இன்னின்ன வேண்டும் என்று கோருகிறார்களோ அவைகளை அந்த நூல் நிலையங்களில் வைக்கும்படி ஒரு ஸ்டான்டிங் ஆர்டர் போடுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : லோக்கல் லைப்ரரி அத்தாரிட்டி என்ன பத்திரிகைகள் போடவேண்டும் என்று முடிவு செய்வார்கள். இதையும் வோட்டு எடுத்து முடிவு எடுக்கவேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயமல்ல.